Regd. No. M. 8-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-1-0.

குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 4-0-0. வெளிநாடு ரூ. 6-0-0.

மாலை 21 ஈரோடு 27-9-1947 சனிக்கிழமை மலர் 3.

# பார்ப்பனீயம் பேசுகிறது!

(சென்னை N. V. நடராசன்)

★

நம் நாட்டு முற்போக்குக்கு ஏற்ற வகையில் ஏதாவது ஒரு சில காரியங்கள் நடைபெறும் போதெல்லாம் அதற்குத் தடையாக முன்வந்து சட்டம், சாஸ்திரம், கடவுள், வேதம், தான தருமம் என்பவைகளைக்காட்டி அவைகள் அழிந்துவிடும் என்று கூப்பாடு போடுவது பார்ப்பனீயத்தின் பழக்க வழக்கமாகி விட்டது. இவ்வாறு நாம் கூறுவதை ஒரு சிலர் தவறாகக் கருதினாலும், இன்று பார்ப்பனீயத்தின் சுயசொரூபம் வெளிப்படையாகத் தெரிந்து வருவதால் ஓரளவு தெளிவு பெற்று வருகின்றனர் என்பது மிகையாகாது.

25 ஆண்டுகளுக்கு முன்னர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களும் சுயமரியாதை இயக்கத்தினரும் மற்றும் பல அறிஞர்களும் ஆண்டவன் கோயில் அனைவருக்கும் உரிமை உடையது என்று கூறி அதற்காக சிறை செல்லும் அளவுக்கு போராட்டம் ஏற்பட்ட காலையில், நம் நாட்டுப் பார்ப்பனீயம், வேதம் புராணம் மட்டுமல்ல சட்ட திட்டங்களையும் காட்டி கடவுளுக்கு விரோதம் என்று கூறி தாழ்த்தப்பட்டோர் என்பவர்கள் கோயிலுக்குள்ளே வர உரிமையில்லையென்று எதிர்த்தது.

பெண்ணுரிமை போற்றிய நம் ஆண்டவன் பேரால் பொட்டுக்கட்டி நம் திராவிடத் தாய்மார்களை வேசிகளாக்குவது அறிவுடைமையுமாகாது; அறமும் அன்று என சுயமரியாதை இயக்கத்தவர் முதற்கொண்டு முற்போக்குடைய அறிஞர் பலர் எடுத்துக்கூறியபோதும் இந்த நயவஞ்சகப் பார்ப்பனீயம் முட்டுக்கட்டை போன்று முன்வந்து நாட்டின் தன்மானத்தைத் தடுத்து வந்துள்ளது. ஆக இதே போன்று ஒவ்வொரு துறையிலும் மக்களை மாக்களாக்கி வரும் பார்ப்பனீயத்துக்கு மூலதனமாகயிருந்து வந்தது நம் மக்களின் அறியாமையேயன்றி வேறில்லை.

எனினும், இன்று பொதுவாக நம் நாட்டினரிடையே ஏற்பட்டுள்ள இன உணர்ச்சியும், பகுத்தறிவும் ஓரளவு பார்ப்பனீயத்தின் பித்தலாட்டங்களை வெற்றி பெற முடியாமலே செய்து வருவதைக் காணலாம். எனினும் இன்றைய நிலையிலுங்கூட பார்ப்பனீயம் தனது சுயநல ஏமாற்றுக் குணத்தை விட்டபாடில்லை.

ஜெமீன்தாரி முறை ஒழியவேண்டுமென்று திராவிடர் கழகத்தினர் உள்பட எல்லாக் கட்சியினரும், பலகாலமாகக் கூறிவந்ததற்கேற்ப இன்றைய அரசியலார் அதற்கேற்ப ஒரு சட்டத்தைக் கொண்டு வந்துள்ளனர்.

அச்சட்டத்தில் ஜமீன்தாரி முறை மட்டுமின்றி இனாம்தாரர் என்ற கூட்டத்தினரின் ஏகபோக மிராசையும் ஓரளவு ஒழிக்கும் முறையில் திருத்தம் செய்துள்ளனர்.

ஜமீன்தாரர் எனப்படுவோர் அந்நாளின் ஆட்சியிலிருக்கும் மக்களுக்குமிடையே இடைத்தரகராயிருந்து வரி வசூலிக்கும் கமிஷன் ஏஜண்ட் வேலையைச் செய்து வந்துள்ளனர். இது அநீதி, உழைப்பவருக்கு நிலத்தில் உரிமையில்லை; இடைத்தரகர் என்ற உழைக்காத ஒருத்தருக்கு உரிமையேன்? இது கூடாது; இம்முறை ஒழிந்தாலன்றி ஏழை மக்களுக்கு, உழைப்பாளிகளுக்கு உய்வில்லை என்பதை அனைவரும் கூறி வந்தனர்.

இனாம்தாரர்கள் என்று கூறப்படும் கோஷ்டியினரோ எனின் ஆளவந்தார்க்கும் அவர் தம் ஆட்சிக்கு உட்பட்டோருக்குமிடையே இடைத்தரகராயிருந்து வரி வசூலிக்கும் ஏஜண்ட், என்ற வேலையைக்கூடச் செய்யாத முறையில் சாதாரண பொறுப்பைக்கூட ஏற்றுக் கொள்ளாத வகையில் "நாங்கள் ஆண்டவரின் பிரதிநிதிகள் எனவே ஆட்சியினர் எங்களுக்கு ஆவன செய்தல் வேண்டும்" என்ற அதிகார தோரணையிலே கடவுள், வேதம், சாஸ்திரங்களைக் காட்டி இனாமாக நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான வேலிகளைச் சொந்தமாக்கிக்கொண்ட கூட்டத்தினர் எனினும் இன்று வரை ஓரளவு பொறுப்பாகிலுமுள்ள ஜமீன்தாரர்களையோ அல்லது ஒருவித உழைப்பும், பொறுப்புமில்லாத சுகபோகங்களை அனுபவித்து வந்த இனாம்தாரர்களைப்பற்றியோ நாம் மறந்து விட்டு, இனியாவது உழைப்பவருக்கே உரிமை இருத்தல் வேண்டுமென்ற மனிதத்தன்மையை முன்வைத்த ஜமீன்தாரி முறையும் வேண்டாம், அதைவிட பிற்போக்குத்தன்மையிலுள்ள இனாம்தாரர்கள் உரிமையும் கூடாது என்று ஜமீன் ஒழிப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

அதுகூட இனாம்தாரர்களின் உரிமையை அடியோடு நீக்காது, ஓரளவு அதாவது நில மேல்வார பாத்தியதையை நீக்குவதென்பதேயாகும்.

ஜமீன்தாரர்களில் 100க்கு 99 பேர் பார்ப்பனரல்லாதாரா (திராவிடரா)யிருந்துங்கூட திராவிடர் கழகமோ அல்லது மற்ற கட்சியிலுள்ள திராவிடர்களோ வக்காலத்து வாங்கினார்களில்லை. இன்னுங் கூறவேண்டுமானால் ஜெமீன்தாரி முறை உடனடியாக எடுபடவேண்டுமென்று அரசியலாருக்கு அவ்வப்போது எடுத்துக்கூறிவந்தனர். அதே சமயத்தில் பார்ப்பனர்களும் இதில் முக்கிய அக்கறை காட்டினர், அது வரவேற்கத்தக்கதேயாகும்.

ஆனால் யாதொரு உழைப்போ, உரிமையோ யில்லாத இனாம்தாரர் பாத்தியதையும் இருக்கக்கூடாதென்று அரசியலாரின் சட்டத்தில் கண்டவுடனே, ஜமீன்தாரி முறை ஒழியவேண்டுவது நியாயம் என்று உரத்தகுரலில் கூப்பாடு போட்ட பார்ப்பனீயம் இனாம்தாரிசம்

மட்டும் இருத்தல் வேண்டும் என்று சட்டம் பேச ஆரம்பித்துவிட்டது.

அதுமட்டுமல்ல. இனாம்தாரர்களுக்கு ஆதியில் தர்மம், நன்கொடை மற்றும் சில காரியங்களுக்காக கொடுக்கப்பட்ட உரிமையான இதை ஒழிப்பது சாஸ்திரத்திற்கு, கடவுளுக்கு, தர்மத்திற்கு விரோதம் என பழைய வறட்டுவாதங்களையும் வழக்கம்போலக் கூறிக் கூப்பாடு போடவும் முன்வந்தார்கள்.

இவ்வாறு கூறுபவர்கள் தர்ப்பைப் புல்லை ஏந்தி நிற்கும் பார்ப்பனரல்ல, இந்துஸ்தானுக்கு எதிர்காலத் தலையெழுத்தை நிர்ணயிக்க அ. நி. சபையின் பிரம்மாக்களாக வீற்றிருக்கும் நவீன தேசபக்தரான மயிலை அல்லாடி அய்யரிலிருந்து; வேங்கடராம சாஸ்திரிகளும், வைத்தியநாதய்யர்களும், மேல்நாடுகளெல்லாம் சுற்றி அகில உலக சான்பிரான்சிஸ்கோ மகாநாட்டில் பத்திரிகை நிருபராகச் சென்ற தினமணி சிவராம அய்யர்வரை கூப்பாடு போடுகின்றனர், சட்டத்தைச் சாஸ்திரத்தைக்காட்டி; ஆனால் இந்தச் சட்டமும் சாஸ்திரமும் ஜமீன்தாரி ஒழிப்புக்குமட்டும் பார்ப்பனீயக் கண்களுக்குத் தெரியவில்லை. இதற்குக் காரணம் என்ன? முன்னாளில் நமது மூதாதையரிடம் தர்மம், கடவுள், சாஸ்திரம் என்பவைகளைப்பேசி ஏமாற்றி ஏகபோக உரிமையாக நம் நில புலன்களைக் கொள்ளைகொண்ட இந்த இனாம்தாரர்களில் நூற்றுக்கு 99 பேர் அய்யர், அய்யங்கார், சாஸ்திரி, சர்மா, ஜீயர் என்ற பார்ப்பனர்களேயாகும்.

எனவே தங்களது இனத்தவர்களின் ஏகபோக வாழ்வுக்கு சிறிதளவு தலைநோய் வருமானால்கூட பார்ப்பனீயம் கட்டுப்பாடாக, பத்திரிகைமூலம் பல துறைகளில் பதறுகிறது; பேசுகிறது, மயிலை சீமான்களின் சட்ட நுணுக்க சாஸ்திர ஆதாரங்கள் மூலமாக.

எனவே ஒருசிறிது பொறுப்பும் உரிமையுமுள்ள ஜமீன்தாரிஸமே—ஒழியும்போது அவ்வித சாதாரண பாத்தியதையில்லாத ஏமாற்று நிலையிலுள்ள இனாம்தாரிசம் ஒழியவேண்டுவது மிக மிக இன்றியமையாததாகும்.

இன்னும் கூறவேண்டுமானால் ஜமீன்தாரிஸத்தைத் தாங்கி நிற்பது இந்த இனாம்தாரிசமேயாகும்.

ஜமீன்தாரிசமாவது ஆளவந்தாருக்கும் மக்களுக்கும் இடைத்தரகராயிருந்து வந்தது. இந்த இனாம்தாரிசமோ என்றால், நம் மக்களின் முன்னேற்றத்தைத் தடுத்துவரும் பார்ப்பனீயத்துக்கும், ஆளவந்தாராகிய ஆட்சியினருக்கும் இடைத்தரகராகிய ஜமீன்தாரிசத்துக்கும் தரகராயிருந்ததுமட்டுமின்றி உழுத்தோர்களுக்கு உல்லாச வாழ்வை உண்டாக்கி வந்துள்ளது.

ஆக என்னதான் திடீர் தேசபக்தி ஏற்பட்ட அல்லாடி அய்யராயிருந்தாலும்; பழைய பாரதமாதா புத்திரர்களான 'தினமணி' அய்யரைப்போன்றவர்களாயிருந்தாலும் தங்களது இனத்தவர்களுக்காக நம் நாட்டை, ஏழை மக்களை, உழைப்பாளர்களின் நல்வாழ்வை நாசம்செய்வதில் சிறிதேனும் தயங்க மாட்டார்கள்.

அத்தன்மையைக்கொண்டே இன்று இனாம்தாரர் என்பவர்களுக்காக பார்ப்பனீயம் பேசுகிறது, சட்டத்தை—சாஸ்திரத்தை முன்நிறுத்தி.

இதில் நமது அரசியலார் குறிப்பாக ஓமந்தூரார் சிறிதேனும் விட்டுக்கொடுக்காமல் ஜமீன்தாரி முறையையும், இனாம்தாரிசத்தையும் ஒழிப்பதில் உறுதியாய் நிற்கவேண்டும். அதற்கு உற்ற துணையாக நாட்டின் முற்போக்குடைய அனைவரும் இருப்பர். குறிப்பாக திராவிடர்கழகமும் இருந்துவரும். பார்ப்பனீய சலசலப்புக்கு அரசியலார் அஞ்சுதல் வேண்டாம்; அக்காலம் மலையேறிவிட்டது என்பதையும் இன்று பல துறைகளில்மெய்ப்பித்துவருகிறது திராவிடம்!

## கடவுள் வீட்டில் கள்ளன்!

திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயிலில், 21ந்தேதி இரவு யாரோ சிலரால் சுமார் இரண்டு லட்ச ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகளும், மற்ற சாமான்களும் களவாடப்பட்டுள்ளதென்றும், போலீஸ் அதிகாரிகள் புலன் விசாரித்து வருகின்றனரென்றும் தெரிய வருகிறது.

---

## ஏஜண்டுகள் தேவை.

நம் "குடி அரசு" பத்திரிகைக்குக்கீழ்க்கண்ட ஊர்களுக்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

அரக்கோணம்
அம்பாசமுத்திரம்
பெங்களூர் சிட்டி
கடம்பூர்
காவேரிப்பாக்கம்
நாமக்கல்
பண்ருட்டி
சங்ககிரி துர்க்கம்
சீர்காழி
உடையார்பாளையம்
குற்றாலம்
கூடுதுறை
நீடாமங்கலம்
அம்மாபேட்டை
நாகப்பட்டணம்
மன்னார்குடி
வாடிப்பட்டி

மானேஜர்,
"குடி அரசு" ஈரோடு.

## பிர்லா ராஜ்யம்!

சென்னை நகரில் சென்றவாரம், சரத்சந்திரபோஸ் அவர்கள் பேசுகையில் இன்றைய ஆட்சியை சுதந்திர சர்க்கார் என்று கூறுவதில் அர்த்தமில்லை, இன்று நடப்பது இந்திய முதலாளித்துவத்தின் முதல்வரான "பிர்லா ராஜ்யமே"யாகும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதோ பாருங்கள் தோழர்களே! அதை மெய்ப்பித்துவிட்டனர் காங்கரஸ் காரியக்கமிட்டியினர்.

இம்மாதம் 23ந்தேதியன்று அ. இ. கா. காரியக் கமிட்டியினர் பிர்லா மாளிகையிலே கூடினர்.

மற்றக் கட்சியினர் இவ்வாறு எங்கேயாவது சாதாரண மாளிகையில் கூடினால் அவர்களை முதலாளிகளின் அடிமைகள் என்று நையாண்டிசெய்த காங்காசார் இன்று வடநாட்டு பாசிச ஆட்சியின் உயிர்நாடியான பிர்லா மாளிகைக்குச் செல்லுகின்றனர், முன் கூறியதை மறந்தல்ல, கொள்கையில் விட்டுக்கொடுத்தேயாகும்.

எனவே இதைக்கண்டு "மாளிகை போக்கிகள் மக்களின் எதிரிகள்' என காங்கரசாரை எள்ளி நகையாடுவது மட்டுமன்றி காங்கரஸ் பாசிச வெறியரிடம் சிக்குண்டுவிட்டதென்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு என்று கூறுவதும் மிகையாகாது.

---

இப்பொழுது மத சம்பந்தமாகவோ சாஸ்திர சம்பந்தமாகவோ, கடவுள் சம்பந்தமாகவோ உள்ள புரட்டுகளுக்கெல்லாம் ஒரேஒரு சமாதானம்தான் இருந்து வருகிறது. அது என்னவென்றால் நம்பாதவன் "நாஸ்திகன்" என்பதுவே.

— ஈ. வெ. ரா.

மதிப்புரை:

## "போர்வாள்"

வரப்போகும் இன விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட இளைஞருக்கும் மற்றோருக்கும் இனவுணர்ச்சியும் எழுச்சியும் ஊட்டி எதிரிகளைச் சாய்க்க வந்துவிட்டது "போர்வாள்" உணர்ச்சி ததும்பும் இனிய எளிய நடையிலே எழில்மிகு கட்டுரைகளும், சித்திரங்களும் தாங்கி வாரந்தோறும் வெளிவரும் இப்"போர்வாள்" திராவிடர் அனைவரின் கரத்திலும் திகழவேண்டுமென விரும்புகிறோம்.

ஆசிரியர்கள்:-
காஞ்சி மணிமொழியார் &
மா. இளஞ்செழியன் B. A., (Hons)
விலை அணா 0-1-6.
கிடைக்குமிடம்: சென்னை-1

# காங்கரஸ் என்பது பார்ப்பனீயமே!

★

பார்ப்பனியம் காங்கரசில் புகுந்து கொண்டு நாட்டின் பெரும்பாலான மக்களாகிய சூத்திரர், பஞ்சமர் என்பவர்களுக்கு அரசியல் நிர்மாண சபைகளில் அவர்களின் உண்மைப் பிரதிநிதிகள் இடம்பெற முடியாமற்படி செய்து வருவதைத் தடுத்து அவர்களுக்காக பாடுபட்டுவரும் "உண்மை இந்திய தேசிய காங்கரஸ் கட்சி'க்கு பிரதிநிதித்வம் அளிக்கப்படாதபட்சத்தில் தாம் இரண்டாம் முறையாக உண்ணாவிரதம் இருக்கப்போவதாகக்கூறி மகாத்மா காந்தியாருக்கும், காங்கரஸ் ராஷ்டிரபதிக்கும் காங்கரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினருக்கும் எழுதியுள்ள திறந்த மடலில் தீவிர காங்கரஸ்வாதியான ஆந்திரத்தோழர் பெஜவாடா டி. ராகவசந்திரய்யசத்சாஸ்திரியார் ஒருபகுதியில்குறிப்பிடுவதை இன்றைய காங்கரஸ் ஆட்சி பச்சைப் பார்ப்பனீய ஏகாதிபத்திய ஆட்சிதான் என்று கூறுவது, நாம் மட்டுமல்ல; பகுத்தறிவுடன் ஆராயும் எவரும்தான் அப்படிக் கூறவேண்டியிருக்கும் என்பதற்கு ஆதாரமாகக் கீழே தருகிறோம்:

'ஒரு சூத்திரன் கல்வி கற்க முயற்சித்தால் அவனை நாடுகடத்துவது மற்றும் பல தண்டனைக் குட்படுத்தவேண்டும் (கௌதம தர்ம சூத்திரங்கள் 2-3.5) என்றும், இதர மேல்ஜாதியாரோடு சரிசமமாக உட்காரவோ, படுக்கவோ விரும்பும் சூத்திரன் கடுந்தண்டனைக்குள்ளாக்கப்படவேண்டுமென்றும், ஆனால் ஒரு பார்ப்பனன் ஒரு சூத்திரனை எவ்வளவுதான் தூஷித்தாலும் அவன் தண்டனைக்கு உள்ளாக்கப் படக்கூடாது (கௌதம தர்ம சூத்திரங்கள் 2—3—10) என்றும், தனக்கு என்னதான் திறமையிருந்தாலும் ஒரு சூத்திரன் தானாகப் பொருள்தேடி சாப்பிட முயற்சிக்கக்கூடாதென்றும், அவன் மேல்ஜாதியார் உண்டு மிகுந்த எச்சில் பண்டத்தை உண்பதோடு திருப்தியடையவேண்டும் (கௌதம தர்ம சூத்திரங்கள் 2—1—61) என்றும் இப்படி அதர்ம சாஸ்திரங்களென்று விளம்பரப்படுத்தியும், இத்தக்கொள்கைகளை புராண இதிகாசங்களில் புகுத்தி இவற்றை நம்பும்படிக்கும், இவற்றின்படி நடப்பதுதான் தர்மமென்றும் கூறி மக்களைப் பலவந்தப்படுத்தியும், பார்ப்பனீயம் ஜன்ம ஜன்மாந்திரங்களாக சூத்திரர்களை பிறவிப்பாபிகள், பிறவிச் சண்டாளர்கள் என்று ஏசியும், பார்ப்பனர்தான் பூலோக கடவுள்கள் ஆதலால் இப்பூலோக சொத்து சுதந்திரம் யாவற்றிற்கும் அவர்களே உரியவர்கள் என்றும், க்ஷத்திரியர்களும், வைஸ்யரும் அவர்களது (பிராமணர்களது) பொருளைப் பாதுகாத்துவரும் ஏவலாளிகள்தான் என்றும் இவர்கள் (பிராமணர்கள்) நீங்கிய மற்றையோர் யாவரும் விமோசனமற்ற நிரந்தர பாபப் பிண்டங்கள் சண்டாளர்கள் என்றும் கூறி கடவுள் போலவும், மதத்தின்போலும் உண்மையான நீதி, நேர்மை, ஒழுக்கம், அஹிம்சை இவை எதற்கும் கட்டுப்படாத ஒரு கொடுங்கோல் ஆட்சி புரிந்து வந்திருக்கிறது.

இத்தகைய ஒரு கொட்டுமத ஆட்சியில் சுய சிந்தனையாளரான மகாத்மா காந்தி, ராஜாஜி ஆகியவர்களுடைய அறிவும் மழுங்கிவிட்டதென்பது "அவ்வளவு ஒன்றும் ஆச்சரியப்படக்கூடியதல்ல. நீதி, நேர்மை, உண்மை, அஹிம்சை இவற்றிற்காகவே பாடுபட்டு வருபவரான, சபர்பதி மஹரிஷி என்று போற்றப்படுவரான மகாத்மா காந்தியவர்களாலேயே நமது வாழ்விற்கே மூலகாரணமான நான்கு தத்துவங்களுமே தமது வர்ணாச்சிரம ஆதரிப்பால் அழிக்கப்படுகின்றன என்பதை உணர்ந்துகொள்ள முடியவில்லையென்றால் மக்களின் சுயஅறிவு பார்ப்பனீய ஆதிக்கத்தால் சென்ற 5000 ஆண்டுகளாக எவ்வளவு பாதிக்கப்பட்டுவிட்டதென்பதற்கு வேறோர் உதாரணமும் வேண்டுமா? காந்தியார் வர்ணம் என்பது பற்றி விளக்கம் கூறும்போது தனது பிற்கால வாழ்க்கைக்கு தான் பிறப்பதற்கு முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்டதொரு தொழில்முறையென்றும் தன் குல முறைப்படி தன் தகப்பன் செய்து வந்த தொழிலையே தானும் செய்வதுதான் பதி தத்வம், பதி தர்மம் என்றும், அதன்படி தாசியின் மகள் தாசியாகவே வாழ்வதும், மரமேறி மகன் மரமேறி வாழ்க்கை நடத்துவதும்தான் முறையென்றும் கூறியுள்ளார். விபசாரம் ஒழுங்கற்றதென்று தாசிமகள் அதை விரும்பாவிட்டாலும் குலதர்மத்தைக் காப்பாற்ற அவள் விபசாரம் செய்துதான் தீரவேண்டும். மக்கள் மது பானம் செய்வதற்கு உதவிசெய்தல் பஞ்சமா பாதகங்களுள் ஒன்றாகும் என்று நினைக்கும் மரமேறி மகன் குலதர்மத்திலிருந்து வழுவாமல் இருக்கவேண்டி மரமேறி கள்ளிறக்கித்தான் பிழைக்கவேண்டும். இவ்விதம் பதித்துவத்தின் பேரால் ஒழுக்கத்திற்கும், மனச்சாட்சிக்கும் மாறுபட்டு நடக்கும்படி வற்புறுத்தப்படுகிறார்கள். தமது வர்ணாச்சிரம ஆதரிப்பால் தாம் போற்றும் இத்தத்துவங்கள் அழிக்கப்பட்டு விடுகின்றன என்பதை அவரால் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு பார்ப்பனீயம் அவருடைய அறிவை மழுங்கச் செய்திருக்கிறது. இதைப் பின்னாடி காந்தியார் 19—9—46ல் அசோசியேட்டட் பிரசுக்குக் கொடுத்த செய்தியில் சிறிது மாற்றிக்கூறினார் என்றாலும் அதுவும் திருப்தியற்றதாகவும், முடிவற்றதாகவும், பல குறைகள் உடையதாகவும்தான் இருந்தது.

ராம வசிஷ்டர் கூட்டால் சம்புகன் கொலை செய்யப்பட்ட காலத்திலிருந்தே ஹிந்து தர்மம் இப்படித்தான் இருந்து வந்திருக்கிறது. சூத்திரர்கள் தாம் பிராமணர்களால் கொலை செய்யப்படுவதை ஒப்புக்கொண்டிருக்கவேண்டியிருந்ததோடு அவர்கள் தாமாகவே தம்மைக் கொன்று கொள்ளவும் ஹிந்துதர்மம் வழி செய்து வைத்திருக்கிறது. வேதோக்த முறைப்படி அதிதி பூஜை செய்யவோ பிரம்ம பூஜை செய்யவோ எந்த சூத்திரனுக்கும் உரிமை இல்லை. அவன் புராணோக்தமாக செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறதெல்லாம் அர்த்தமற்ற முட்டாள்தனமான சடங்குகள்தான்.

மகாத்மா காந்தியார் ஒரு சமயம் "உலகத்திலேயே சந்தோஷகரமான திருப்திகரமான மக்கள் பிரிட்டிஷ் மக்கள் தாம்?" என்று கூறினார். ஆனால் தாமும் தமது காரியக்கமிட்டியாரும் எத்தகையவர் என்று கூறினாரில்லை. அட்லாண்டிக் சாசனத்திற்காக போரிட்ட இவ்வீரர்கள் அதன் அடிப்படை உரிமைகளாகிய மத உரிமை வழிபாட்டுரிமை தன்னிச்சைப்படி நடக்கும் உரிமை ஆகிய இவற்றைக்கொடாமலும் "சூத்திரருக்கும்" "பஞ்சமருக்கும்" கோவிலில் மணியடிக்கும் உரிமையும், மூலஸ்தானத்திற்குச் சென்று கடவுளை வணங்கும் உரிமையும் பிராமண தர்மத்தைக் கடைப்பிடித்து வேதமுறைப்படி பிராமணப் பெண்ணை மணக்கும் உரிமையும் இன்று வரைக்கும் மறுத்து வருவானேன்"

என்று காங்கரசின் ஒழுங்கற்ற நடவடிக்கைகளை விளக்கிக்கொண்டே போய்க் கடைசியில் குறிப்பிடுவதாவது:—

"உண்மைத் தேசிய காங்கரஸ் கட்சிக்கு பிரதிநிதித்வமளிக்க மறுப்பது தேசத்தின் ஏகப்பிரதிநிதியென்று உரிமை பாராட்டிக்கொள்ளும் காங்கரஸ் மேலிடத்தின் கௌரவத்திற்கு இழுக்காகும். "மேலும்

[தொடர்ச்சி 8ம் பக்கம்]

## வேண்டுகோள்.

☆

இயக்கப் பொதுக்கூட்டச் செய்திகள், திருமணச்செய்திகள், அதற்காக அனுப்பப்படும் நன்கொடைகள் ஆகியவற்றைத் தயவுசெய்து சென்னை "விடுதலை" ஆபீசுக்கே அனுப்பிவிட வேண்டுகிறோம்.

—ஆசிரியர்.

குடி அரசு

27-9-47 சனிக்கிழமை

# 'சுயராஜ்ய' நாட்டில் சோறும் சிலையும்

சுதந்திரம் வந்து விட்டதாக மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள்! "சுதந்திரவிழாக் கொண்டாடாதவர்கள் அறிவிலிகள் சுதந்திர துரோகிகள்" என்று ஒரு கூட்டம் பார்ப்பனர்களுக்கு வால்பிடித்துப் பின்பாட்டுப் பாடுகின்றது. "என்ன சுதந்திரமப்பா? எதற்கு ஆக வந்த சுதந்திரமப்பா? வந்ததின்—வருவதின்—வரப்போவதின் பயன் என்ன ஆயிற்றப்பா? என்ன ஆகப் போகிறதப்பா? இந்த சுதந்திரத்துக்கு ஆகவா இத்தனை நாள் நீ கூப்பாடு போட்டுப் பகுத்தறிவு வாதியானது?" என்று கேட்டால் அதற்கு பதில் இல்லாமல் "நீ சுதந்திர விரோதி ஆகிவிட்டாய், முழு துரோகியாக ஆகாவிட்டாலும் சுதந்திர துரோகி என்று பிறர் அழைக்கும்படியான—கருதும்படியான அளவு துரோகி ஆகி விட்டாய்" என்கின்றனர் சுதந்திரத்துக்குப் புதிய பாஷ்யம் கண்டுபிடித்த "பிரகஸ்பதி" கூட்டம். இந்தக்கூட்டங்கள் நம்மைப் பார்த்து இப்படி சொல்லி தேசபக்த சுதந்திரவாதிகள் கூட்டத்தில் சேர்ந்து "சபாஷ் தேசாபிமானச் சின்னமே வா, வா, அடியோடு வா, வந்துவிடு, உன்வரவு நல்வரவு ஆகுக" என்ற பரிவான வரவேற்பைப் பெற்று உயர்வாழ்வு வாழ அடிகோலுவதற்கும் மற்றொரு கூட்டம் இவர்களுக்கு மீசை முளைப்பதற்கு, மீசைகூட அல்ல, பல் முளைப்பதற்கு முன்பே இருந்து நம்மை தேசத்துரோகிகள், வெள்ளையன் கூலிகள், விடுதலை முட்டுக்கட்டைகள், சுயநல உருவங்கள் என்று சொல்லி வந்தவைகள் மாத்திரமல்லாமல் ஆகஸ்ட் துரோகிகள், காட்டிக் கொடுத்த வஞ்சகர்கள், கண்ணற்ற கபோதிகள், தேசிய ஞான சூனியர்கள் என்று அழைத்தது மாத்திரமல்லாமல் சென்றவிடமெல்லாம் செருப்பும், கல்லும், சாணியும் வீசுதலும் கண் குத்துதலும், கால் வெட்டுதலும், கொட்டகையில் தீ வைத்துக் கொளுத்தலும் செய்த "தேசாபிமான"க்காரியத்திற்கும் பிரமாதமான வித்தியாசம் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. அவர்களது நோக்கத்துக்கும் இவர்களது நோக்கத்துக்கும் பிரமாதமான முரண்கள் இருப்பதாக நாம் நினைக்கவில்லை.

சுயராஜ்யம் என்பதைப்பற்றி நம் கட்சி, அல்லது நம் கழகம், அல்லது நம் யோக்கியமான நாணயமான நோக்கம் இன்றுமாத்திரமல்லாமல் இன்றைய திராவிட கழகமானது இன்றைக்கு முப்பதாண்டுகளுக்கு முன்பதாக ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரால் இருந்து வந்த காலம் முதல் என்ன சொல்லி வந்திருக்கிறது என்றால் (Home Rule is Brahmin Rule) ஹோம்ரூல் ஈஸ் பிராமின் ரூல் அதாவது 'சுய ஆட்சி என்பது பார்ப்பன ஆட்சி" என்பதாகக் கருத்துக் கொண்டிருப்பதாகச்சொல்லி ஒலித்துக்கொண்டு வந்து இருக்கிறது என்பது மாத்திரமல்லாமல் அந்தக் கருத்தை விளக்கி மெய்ப்பித்துக் காட்டியே இந்த வஞ்சகச் சுதந்திர முயற்சிக்கு எதிராக ஒரு பலமான ஸ்தாபனத்தை அமைத்து அந்த, அதாவது நமக்குக்கேடளிக்கும் சுதந்திரம் வெற்றி பெறாமல் இருப்பதற்கு ஆக கூடுமான முயற்சியெல்லாம் செய்து உண்மையான யோக்கியமான சுதந்திரத்துக்குப் பாடுபட்டு வந்திருக்கிறது.

இந்த முயற்சியில் நம் மனம் வாக்குக் காயங்கள் பாடுபட்டு வந்ததால்தான் நாம் தேசத்துரோகிகள், வெள்ளையன் கூலிகள் என்கின்ற பெயர்கள் முதல் ஆகஸ்ட் துரோகிகள் என்கின்ற பெயர்கள்வரை பட்டங்கள் வாங்கினோம். இந்தப் பட்டங்கள் வாங்குவதில் பெருமை அடைந்து மேலும் மேலும் ஊக்கமாக போலி சுயராஜ்ய, ஆகஸ்டு தியாக எதிர்ப்புவேலை செய்து அந்த எதிர்ப்புக்கு ஆதரவுதேடிக் கொண்டும் வந்தோம், வருகிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இனியும் ஒரு தடவை எந்தச் சுயராஜ்யத்திற்கு நாம் எதிரிகளாகவும், முட்டுக்கட்டைக்காரர்களாகவும் துரோகிகளாகவும் நம் எதிரிகளால் இடப்படும் கெட்டப் பெயரைப் பொறுத்துக்கொண்டு எதிர்ப்புவேலை செய்தோம், செய்கிறோம் என்பதை விளக்க ஆசைப்படுகிறோம். அதாவது காங்கரஸ்காரர்கள் சொல்லும் (ஹோம் ரூல் ஈஸ் பிராமின் ரூல்) சுய ஆட்சி என்பது பார்ப்பன ஆட்சி என்று சொல்லிவந்த சுயராஜ்யத்தைத்தான் சொன்னோம், சொல்லுகிறோம், சொல்லவும் போகிறோம். இதை மறுப்பவர்களுக்கும், நமக்கும் அடிப்படையிலேயே அதாவது நம் கட்சியின்—கழகத்தில் ஆரம்ப முதலே அபிப்பிராயபேதமிருந்து ஏதோ உட்கருத்துக்காக இதைக் காட்டிக்கொள்ளாமல் ஒருவரை ஒருவர் கெட்டிக்காரத்தனமாக அறிந்துகொள்ளாமல் இருக்கும்படி செய்துவந்து இருக்கிறோம், செய்து வருகிறோம் என்பது தான் நமது தாழ்மையான கருத்து என்போம். அப்படி அடிப்படைக்கருத்து வேற்றுமை இல்லையானால், அதாவது காங்கரஸ்காரர்கள் சொல்லும், காங்கரஸ்காரர்கள் பாடுபடும் லட்சியம் பார்ப்பன ஆட்சி என்பதற்கு அல்லாமல் உண்மையான சுயஆட்சிக்கு உண்மையான சுதந்தரத்துக்கு என்று இருக்குமானால் ஆகஸ்ட் தியாகத்தில் 'குயிட் இண்டியா'வில்—'வெள்ளையனே வெளியே போ' என்னும் கோஷத்தில் நாம் கலந்துகொள்ளாததின் காரணம் என்ன? அதுதான் போகட்டும் உப்புச் சத்தியாக்கிரகம் முதல் நடந்துவந்த அனேக சுயராஜ்ய முயற்சிகளில் "தேசியத் திருத்தொண்டு"களில் சேர்ந்து

தொண்டாற்றாமல் தனித்து, தனித்துமாத்திரம் அல்லாமல் எதிர்த்தும்கூட நின்றது ஏன்? எனவே எதற்குஆக தனித்து நின்றோமோ, எதற்குஆக எதிர்த்து நின்றோமோ அந்தக்காரியங்கள் கருத்துக்கள் ஆகஸ்ட் 15ந்தேதி கொண்டாடவேண்டிய சுதந்தர விழாவிற்குக் காரணமான சுயராஜ்யத்தில் ஒரு பகுதியாவது "சுயாட்சி பார்ப்பனஆட்சி அல்ல" என்றும், "எல்லாமத ஜாதி வகுப்புப் பிரிவு மக்களின் சம-சுதந்திர ஆட்சி" என்றும் சொல்லும்படியான கருத்துக்கு ஏற்றதாக இருந்ததா? இருக்கிறதா? அல்லது இருக்கப் போகிறதா? சிறிதுகூட இல்லையே! சுய ஆட்சி என்பது, பார்ப்பன ஆட்சி என்பது மாத்திரமல்லாமல் கேள்வி கேட்பாடு அடியோடு அற்ற வடநாட்டானின் சர்வாதிகாரக் கொடுங்கோல் மும்மூர்த்திகள் ஆட்சியாகவும் ஆகிவிட்டதே! அதாவது பச்சை மனுதர்ம ஆட்சியாக ஆகிவிட்டதே! முன்பு பார்ப்பனனிடம் இருந்து விடுபட்டால், தப்பினால் போதும் என்று நினைத்து சுயராஜ்ய முயற்சி என்ற காங்கரசை எதிர்த்தநாம் இன்று பார்ப்பனனைவிட வடநாட்டான் கொடியவனாக இருக்கிறானே இதற்குக் காரணம் என்ன என்பனவாகியவைகளைப் பற்றி நன்றாய் சிந்தித்துப் பார்த்து ஒளிக்காமல் மற்ற பாமர மக்களோ அல்லது செல்வாக்குப் பெற்ற எதிரிகளோ அவர்களது அடிமைகளோ நம்மை என்ன சொன்னாலும் சரி நமக்கு அதைப்பற்றிக் கவலையில்லை, உண்மையைச் சொல்லி வந்ததை அனுபவிப்போம் என்ற வீரத்துடன் காரணம் சொல்லவேண்டுமானால் "இன்று வெள்ளையன் இந்த நாட்டைவிட்டு ஓடிப்போனான்" என்று சொலலப்படும் தன்மையால் அல்லவா என்று கேட்கிறோம். வெள்ளையன் நிஜமாய் ஓடி இருந்தாலாவது அல்லது வெள்ளையன் யோக்கியமாய் போயிருந்தாலாவது இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதோடு, இன்று வெள்ளையன் காங்கரசுடன் ஒரு இரகசியமான ஒப்பந்தம் செய்து கொண்டு தலைமறைவாய் இன்னும் இந்தியாவுக்கு எஜமானாகவே இருந்து வருகிறான். என்பதுடன், ஜால வித்தைக்காரன் கோழி முட்டையை உள்ளங்கையில் மறைத்துக்காட்டுவதாகச் சொல்லி முட்டையை அக்குள்ளில் வைத்துக் கையை விரித்துக்காட்டுவது போல் "வெள்ளையன் போய் விட்டான் இனி நமதே ராஜ்யம்" என்கிறார்கள் முதலாளிமார்கள், என்கிறோம். இந்தக் காரணத்தாலேயே வெள்ளையன் போய் விட்டான் என்பதும் சுயராஜ்யம் வந்து விட்டது என்பதும் சுதந்திரவிழாக் கொண்டாட்டம் என்பதும் நமக்குக் கருத்தறுப்பதாக வந்து முடிந்திருக்கிறது என்று சொல்லுகிறோம்.

இதன்பின் விளைவைப்பற்றிச் சிறிது யோசிப்போம்.

இப்போது சுயராஜ்யத்தில் மக்களின் ஜீவநாடி போன்ற சுவாசம் போன்ற தேவையான சோறும்—சீலையும் எப்படி இருக்கிறது என்று பாருங்கள். சோறு ஆள் ஒன்றுக்கு (பெரியவர்களுக்கு) 8 அவுன்ஸ் அரிசி. இது நல்ல ஆளுக்கு அரை வயிறுக்குத் தான் போதுமானதாகும். சாதாரண ஆட்களுக்கு முககால் வயிற்றுக்கு போதுமானதாகும். இதுவும்கூட கிராம மக்கள் பெரிதும் கள்ள மார்க்கட்டை நம்பி 1க்கு 3-பங்கு விலை கொடுத்தும் சில இடங்களில் 1 பட்டணம்படி அரிசிக்கு 2 ரூபாய் விலை கொடுத்தும் வாங்கி வயிறாரச் சாப்பிடவேண்டி இருக்கிறது. சீலை என்கின்ற, இடுப்புக்குத் துணியோ ஒரு ஆளுக்கு (பெரிய ஆளுக்கும், பெண்களுக்கும் தலைக்கு) ஐந்து கெஜம் துணிதான்.

ஆனால் இதே சோறும் சீலையும் பம்பாய் (பட்டேல் மாகாண) மக்களுக்கு சோறு (உணவு) ஆள் 1-க்கு 12-அவுன்சு விதம் கொடுக்கப்பட்டு வருகிறது. (இது சுதேசமித்திரன் பத்திரிகையில் இருக்கிறது) "ஐக்கிய மாகாண (மாகிய ஜவஹர்லால் பண்டிதர் மாகாண)த்திற்கு இதைவிட அதிகமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. அதாவது 16 அவுன்ஸ் இருக்கலாம் (இதுவும் ஷை சு. மி. செய்தி)

இனி துணி விஷயம் பார்க்கலாம். பம்பாய் மாகாணத்துக்கு துணி நபர் ஒன்றுக்கு மார்ச்சு மாதம் வரையில் 24 கெஜம் விதம் கொடுக்கப்பட்டு வந்தது. நாம் கூப்பாடு போட்ட பிறகு அங்கு இப்போது நபர் 1க்கு 12 கெஜம் கொடுக்கப்பட்டு வருகிறது. பஞ்சாபில் 15 கெஜம் விதம் கொடுக்கப்பட்டு வருகிறதாம். இது தவிர பம்பாயில் மில் துணிகளில் பல ரகங்களுக்குக் கண்ட்ரோல் இல்லை. அந்த ரகங்களில் அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம். நம் மாகாணத்தில் கை நெசவு துணிக்குத்தான் கண்ட்ரோல் இல்லை. ஆனால் அது ஒரு கெஜம் 2 ரூபாய்க்குக் குறைந்த விலையில் கிடைப்பதில்லை. அதாவது 1க்கு 2 பங்கு 3 பங்கு விலை. ஏழைமக்கள் ரகம் இங்கு அதிகம் நெய்வதும் இல்லை. நம் பெண்களுக்கு அதிலும் கூலிப்பெண்களுக்கு 8 கெஜம் சீலை வேண்டும், ரவிக்கை ஜாக்கட் உடுப்புக்கு வருடத்திற்கு 3 கெஜமாவது வேண்டும். ஆகவே 1 சேலை 3 ஜாக்கட்டுக்கு 1 பெண்ணுக்கு 11 கெஜம் வேண்டும். இதற்கு ஐந்தே கெஜம் என்றால் நம் நாட்டு மக்கள் சுயராஜ்யத்தில் குறைந்த அளவு சோறும் துணியுமாவது கிடைக்கும்படியான நிலையில் இருக்கிறார்களா? நமக்கு இந்தத் தரித்திர நிலைமை ஏன்? நம் திராவிடநாடு அதாவது நம் சென்னை மாகாணம் பாலைவனமா? அல்லது கிலக்கரி நாடா? ஆறு, குளம், ஏரி, அணைக்கட்டு, வாய்க்கால், மலை என்பவைகளையும் அதற்கு ஏற்ற நஞ்சை, புஞ்சை, தோட்டம் என்பவைகளையும் ஏராளமாகக்கொண்டு நம் மாகாணம் 5 கோடி மக்களுக்கும் மாத்திரமல்லாமல் மேற்கொண்டும் ஒன்று இரண்டு கோடி மக்களுக்குப் போதுமான அளவு சோறும், துணியும் கொடுக்கக்கூடிய நாடாகும். மற்றும் நம்நாடு மூன்று புறமும் ஆயிரத்து முன்னூறு மைல் சமுத்திரக்கரையுள்ள நாடாகையால் மூன்றுபுறமும் கப்பல் செலுத்தி உலகத்தில் எந்தப்பக்கத்தில் என்ன இருந்தாலும் அள்ளிக்

கொண்டுவந்து கொட்டிக் கொள்ள சவுகரியமுள்ள நாடாகும்.

நமக்குப் போதுமான அளவாவது நெல் பருத்தி சாகுபடி செய்ய நமக்கு வசதி இல்லையா? அல்லது விளைவில்லையா? தொழிலாளிகள் இல்லையா? இயந்திர வசதிக்கு அறிவும் பொருளும், ஆக்கமும் இல்லையா? ஏன் தரித்திரம், அதிலும் "சுயராஜ்யம்" வந்த பிறகு? சுயராஜ்யத்தினால் தரித்திரமா? சுயராஜ்யம் இல்லாததால் தரித்திரமா? என்பனவற்றை தோழர்களே பகுத்தறிவுடன் காங்கரஸ்க்கு அடிமை என்கின்ற மனப்பான்மை இல்லாமல் சுதந்திர புத்தியோடு சிந்தித்துப் பாருங்கள் என்று வேண்டுகிறோம்.

சுருக்கமாகக் காரணங்களைச் சொல்லுகிறோம். நம் நிலங்கள் முழுவதும் சரியானபடி உணவுப் பொருள்களை உற்பத்திச்செய்வதில்லை. புஞ்சைகளில் எண்ணை வித்தான நிலக்கடலையைப் பெரிதும் பயிர் செய்கிறார்கள் பூமிக்கு உடையவர்கள். இந்த நிலக்கடலை (மணிலாக்கொட்டை என்பது) உற்பத்தியில் 16ல் ஒரு பங்குபோக மீதி 15 பாகம் எண்ணையாகவும், வித்தாகவும், நம் மாகாணத்தைவிட்டு வெளியாக்கப்படுகிறது.

பருத்தியும்கூட அதுபோலவே பகுதி பருத்திக்குமேல் பஞ்சாகவும், நூலாகவும், சில ரக துணியாகவும் நம் மாகாணத்தைவிட்டு வெளிமாகாணத்துக்கும் வெளிநாடுகளுக்கும் செல்லுகின்றது.

இவைகளை ஏன் நிறுத்தவில்லை என்று நம் மந்திரிகளைக் கேட்டால் அவர்கள் "அந்த அதிகாரம் எங்கள் கையில் இல்லை. மேலிடத்தார் இடம் (மத்திய அரசாங்கத்தினிடம்) இருக்கிறது" என்கிறார்கள்.

மற்றும் நஞ்சை பூமிகளிலும் தோட்டங்களிலும், கரும்பு, வாழை, மஞ்சள், புகையிலை முதலிய உணவுதானியம் அல்லாத மற்ற போக போக்கியப் பொருளை ஏன் பயிரிட அனுமதிக்கிறீர்கள், உணவுப்பொருளையே பயிரிட அனுமதிப்பதுதானே என்றால் "கரும்பு பயிரிடும் பூமியில் நெல் விளையாது" என்கிறார். "புகையிலை போட்டால், பூமி உரமாகும்" என்கிறார். "நிலக்கடலை போட்டால் பணம்வரும்" என்கிறார். "வாழை போட்டால் ஏழைகள் வயிறு நிறையும், அது ஒரு ஆகாரம்" என்கிறார். நமது உணவு மந்திரி டாக்டர் ராஜன்.

ஒரு பார்ப்பனர் மந்திரியாய் இருந்தால் அவரிடம் இதைத்தான் எதிர்பார்க்கமுடியும். அவருக்கு (பார்ப்பனருக்கு) "சூத்திரர்களை" எப்படி அடக்கி ஒடுக்கி தரித்திரர்களாக கூலிகளாக மானமற்ற அடிமைகளாக வைத்திருக்கமுடியுமோ அப்படியான வழிகள்தான் தெரியுமே ஒழிய விவசாயம் எப்படித் தெரியமுடியும்? ஆதலால்தான் கரும்பு விளைவிக்கும் பூமியில் நெல் விளைவிக்க முடியாது என்கிறார். புகையிலை, பூமிக்கு உரம் என்கிறார். மற்றும் சர்க்கரை இந்நாட்டுக்கு போதாது ஆதலால் கரும்பு இருப்பது நல்லது என்கிறார். சர்க்கரை செல்வவான்களுக்கு வயிறு நிறைந்தபின் பலகாரம் காப்பி மிட்டாய் முதலியவைகளுக்கு வேண்டியதாகும். தானியம் ஏழைகளின் சோற்றுக்கு வேண்டியதாகும். எனவே பொறுப்புள்ள மந்திரியாய் இருந்தால் உண்மை சுயராஜ்யமாய் இருந்தால் எதை முதலில் பயிரிடவேண்டும்? சர்க்கரை வேண்டுமானால் பனை, தென்னைமரங்கள் இப்போது கள்ளுக்கட்டாமல் இருப்பதால் ஏன் கருப்புக்கட்டி உற்பத்திசெய்து சர்க்கரை ஆக்கக்கூடாது?

தேங்காய் காய்க்கச் செய்வதிலும், தேங்காய் எண்ணையை நம் மாகாணத்தைவிட்டு வெளிமாகாணத்துக்கும் நாடுகளுக்கும் போகவொட்டாமல் செய்வதிலும் நமக்கு எவ்வளவு உணவு லாபமாகும். ஆந்திராவிலும் இது போலவே உணவுப்பண்டம்விளையும் பூமியில் சணல் உற்பத்திச் செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. மற்றும் எத்தனையோ பண்டங்கள் வெளிநாட்டுக்குப் போகின்றன. இவைகளை எல்லாம் ஏன் நிறுத்தக்கூடாது. மற்றும் நம் பஞ்சு வருடத்துக்கு 3½-லட்சம் பேல்களும், நம் நூல் வருஷத்தில் பல லட்சக்கணக்கான பேல்களும் வெளிநாடுகளுக்கு, வெளிமாகாணங்களுக்குப் போகிறது; இதையாவது ஏன் நிறுத்தக்கூடாது என்றால் முதல் மந்திரியார் "மத்திய அரசாங்கத்தார் (மேலிடத்தார்) சம்மதிப்பதில்லை, நாங்கள் என் செய்வோம். மேலிடத்து ஆக்கினை இல்லாவிட்டால் நாங்கள் உங்களுக்குமேல் புத்திசாலிகள் என்று காட்டிக்கொள்ளும்படியான அளவுக்கு வேலை செய்து நம்மாகாணத்தின் கஷ்டங்களைப் போக்க எங்களால் முடியும். இந்த நிலையில் நாங்கள் என்ன செய்ய முடியும்" என்கிறார். மந்திரியின் இந்தக்கருத்தை "மெயில், இந்து, சு-மி."யில காணலாம்.

தோழர்களே, இவைகளை வைத்துக்கொண்டு இன்று நாம் சுதந்திர சுயராஜ்ய சுயநிர்ணய ராஜ்யத்தில் பூரண விடுதலை பெற்று இருக்கிறோமா, அடிமையிலும் அடிமையாக நம் வளப்பத்தை நம் வயிற்றுக்கும் இல்லாமல் அன்னியன் பதறப்பதற அடித்துக் கொண்டு போவதும் தடுக்க, தட்டிப்பேச, வாய் திறக்க, முகத்தைச் சுளிக்கக்கூட அருகதை அற்று மானமற்ற அடிமைகளாக இருக்கும் ராஜ்யத்தில் இருக்கிறோமா சிந்தியுங்கள். பூரண சுயேச்சையுள்ள திராவிடநாடு திராவிடருக்கே ஆகாமல் உங்களுக்கு மானமோ சுதந்திரமோ தங்குமா? உங்கள்வளப்பம் நீங்கள் அனுபவிக்க முடியுமா? யோசியுங்கள்.

---

## அறிஞர் வரதராசனார்

சென்னை பச்சையப்பன் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் தோழர் எம். வரதராசன் அவர்கள் மறைந்தார் என்ற செய்தியைக் கேட்டு நாம் திடுக்கிட்டோம் என்பதுமட்டுமின்றி திராவிடர் அனைவருக்கும் குறிப்பாக மாணவர் உலகத்திற்கும் பெரும் நஷ்டம் எனவே கூறலாம்.

நீதிக்கட்சியின் வளர்ச்சிக்காக தீவிரமாக உழைத்தவர்களில் ஒருவரான அவர், "திராவிடநாடு பிரிவினை"யிலும் பெரும் பங்கு கொண்ட ஆர்வமுடன் முனைந்து நிற்கும் சமயத்தில் மறைந்தார் என்பதைக் கேட்ட

# பெண்கள் விடுதலை

(சித்திரபுத்திரன்)

★

இராஜன்:— என்டா, டேய்! இராமா! பெண்கள் விடுதலை, பெண்கள் விடுதலை என்று பேசுகிறார்களே, அதென்ன விடுதலை? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!

இராமன்:— உனக்கெப்படியப்பா புரியும்? உனக்குகால் டஜன் பெண்டாட்டிகள் இருக்கிறார்கள்; அரை டஜன் வைப்பாட்டிகள். இருக்கிறார்கள் அதோடு நிறையப் பணமும் இருக்கிறது?

இராஜன்:—நான் சொல்லுவது உனக்குக் கேலியாக இருக்கிறது. இந்தப் பெண்களிடமிருந்து எனக்கு (ஆண்களுக்கு) விடுதலை கிடைப்பதுதான் பெரிய கஷ்டமாயிருக்கிறது? ஒருத்தி விட்டால் மற்றொருத்தி இழுக்கிறாள். இவர்களைவிட்டு நான் எப்படி விடுதலை அடைகிறது?

இராமன்:— சரிதான் இப்போது புரிந்தது. நீ அந்தப் பெண்களிடம் கஷ்டப்படுவதினால் உனக்குத்தான் விடுதலை வேண்டும் என்கிறாய். உனக்கு 9 பெண்கள் எதற்கு? ஒரு பெண் இருந்தால் போதாதோ? ஒரு பெண் 9 கணவனை மணம் செய்து கொண்டும் காதலனாக வைத்துக் கொண்டும் இருந்தால் நீ அந்த ஒன்பதில் ஒருவனாக இருக்க சம்மதிப்பாயா?

இராஜன்:—ஒரு பெண்ணுக்கு 9 புருஷன் என்றால் அது என்ன மிருகமா? நாமென்ன மிருக சாதியா? நன்றாய்ச் சொல்லுகின்றாய் நாக்குக் கூசாமல்!

இராமன்:—பெண்கள் விடுதலை என்றால் இப்போது உனக்கு அருத்தமாச்சுதா? நீ ஒன்பது பெண்களை வைத்துக் கொண்டு அவர்களுடைய இயற்கை உணர்ச்சிக்கு உன்னை வலிய இழுக்க வேண்டிய மாதிரிக்கு அவர்களை அடைத்து வைக்கலாம். அது மனுஷத்தன்மை என்கிறாய். ஒரு பெண் 9 கணவனை வைத்துக் கொண்டிருந்தால் அது மிருகத்தனம் என்கிறாய், இந்தக் கொள்கை போகவேண்டுமென்பதைத்தான் பெண்கள் விடுதலை என்று சொல்லுவது. புரிந்ததா?

இராஜன்:—புரிந்தது. நன்றாய்ப் புரிந்தது. நான் அவசரப்பட்டு மிருகத்தன்மை என்று சொல்லிவிட்டேன். ஒரு பெண்ணுக்கு 9 பேர் என்பது இன்றும் தாராளமாய் நடக்கின்றதே. நம்ம தேவதாசிகளைப்பாரேன். நம்ம விலைமாதர்களைப்பாரேன். 9 தானா 90ம், 900மும் கூட இருக்கும் போலிருக்கின்றதே. மக்கள் அங்கு போவதில்லையா? அவர்களை மரியாதை செய்வதில்லையா? அந்தப் பெண்களுக்குச் சுதந்திரமில்லையா? தங்கள் இஷ்டம் போல் பணம் கேட்பதும் தங்கள் இஷ்டம் போல் ஒருவனை "நீ வேண்டாம் வெளியில் போ" என்பதும் நாம் தினமும் பார்க்கவில்லையா? ஆகவே அவர்களுக்குச் சுதந்திரமில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

இராமன்:—பொறு, பொறு அவசரப்படாதே. சுதந்திரம் இருப்பதாக நீ சொல்லும் பெண்கள் யார் என்பதைத் தெரிந்து கொண்டாயா? தேவதாசிகளுக்கும் விலைமாதர்களுக்கும் சுதந்திரம் இருப்பதாகச் சொன்னாய். நீ சொல்லுகிறபடி பார்த்தால் ஒரு பெண் சுதந்திரமாக இருக்கவேண்டுமானால் ஒன்றா தேவதாசியாகப் போய்விடவேண்டும், அல்லது விலைமாதாகப்போய்விட வேண்டும். வெள்ளைத் தமிழில் சொல்லவேண்டுமானால் தேவடியாளாக அல்லது குச்சுக்காரியாகப் போய்விடவேண்டும் என்கிறாய். ஒருவனையே கணவனாகக்கொண்டு திருமணம் செய்து வாழ்க்கை நடத்துகிற பெண்களுக்கு விடுதலை என்பது ஒரு ஆணுக்குப் பல பெண்களில் ஒருத்தியாய் இருந்து அடைப்பட்டுக்கிடக்கவேண்டியதுதான் கடமைபோல் இருக்கிறது?

இராஜன்:—ஒரு பெண் தனிமையில் இருந்து வாழ்க்கை நடத்திக் கொள்ளட்டுமே, யார் வேண்டாம் என்கின்றார்கள்? பெண்கள் தாங்களாகத்தானே யாருக்காவது ஒருவனுக்கு வாழ்க்கைப் படவேண்டும் என்று துடிக்கிறார்கள். அவர்கள் பெற்றோர்களும் "வயது வந்துவிட்டதே என்ன செய்வது? யார் தலையிலாவது கட்டிவிடவேண்டுமே, இல்லாவிட்டால் கெட்டப்பெயர் வந்துவிடுமே" என்று கவலைப்படுகிறார்கள். அதற்கேற்றபடியே கல்வி இல்லாமலும் தொழில் பழக்காமலும் வளர்க்கிறார்கள். அப்படிப்பட்ட பெண்ணைக் கட்டிக் கொள்ள வருபவனும் தனக்கு அடிமைத்தொழில்செய்ய ஒரு ஜீவன்வேண்டும் என்று கருதியே பெண்ணைத் தேடுகிறான். அதோடு இவன் பெறுகின்ற குழந்தைகளுக்கும் இவளுக்கும் வாழ்விற்கு வேண்டியதை எல்லாம் தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டு செய்கிறான். இதற்கு மேல் அடிமை புகுந்தவளுக்கு எஜமானன் வேறு என்ன செய்ய முடியும்? தான் தேடிய சொத்துக்களையும் அடிமைபெற்ற குழந்தைகளுக்கே வைத்துவிட்டுப் போகிறான். இன்னும் என்னதான் செய்யவேண்டும் என்று சொல்லுகிறாய்?

இராமன்:—நீ சொல்லுவதைப் பார்த்தால் பெண்களைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டாம் என்கிறாய்போல் இருக்கிறது. கல்யாணம் செய்துகொண்டால்

---

நமக்கு ஏற்கனவே இயக்கத்தோழர்களில் தீவிர உணர்ச்சியுள்ள சிலரை இழந்துள்ள நமக்கு மேலும் நஷ்டமென்றே கூறலாம்.

அறிஞர் வரதராசன் அவர்கள் பிரிவால் வாடும் அவரது உற்றார் உறவினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், திராவிட மாணவர்கள், குறிப்பாகப் பச்சையப்பன் கல்லூரி திராவிட மாணவர்கள் அவரின் நினைவாக ஆவன செய்யவேண்டியது கடமையாகுமென்றும் வேண்டிக் கொள்கிறோம்.

## வருந்துகிறோம்

நமது இயக்கத் தோழரும், மாஜி முனிசிபல் கவுன்சிலருமான தோழர் எம். ஆர். பாலகுருமூர்த்தி அவர்களின் மூத்த குமாரன் கோவிந்தராஜுலு (வயது 20) டைபாய்ட் ஜுர நோய் வாய்ப்பட்டு 26-9-47 தேதி காலை இயற்கை எய்திய சேதி கேட்டு மிகவும் வருந்துகிறோம்.

# பிர்லா ராஜ்ய தர்பார்!

"பீகார் பீகாரியர்களுக்கே என்ற மாகாண உணர்ச்சி கூடாது; அதேபோன்று ஒவ்வொரு மாகாணத்தவர்களும், மாகாணவெறி கொள்வது நாட்டின் ஒற்றுமையைக் கெடுக்கும்; துவேஷத்தை வளர்க்கும்" என்று தத்துவார்த்தம் கூறுகிறார் காந்தியார்.

ஆனால் சுதந்திர சர்க்கார் என்று கூறப்படும் இன்றைய பிர்லா ராஜ்ய தர்பாரிலே நடைபெறும் மாகாணத்துக்கொரு நீதியைப்பற்றி காந்தியார் என்ன தத்துவார்த்தம் கூறுவாரோ அறியோம். பம்பாயிலே ஆள் ஒன்றுக்கு உணவு 12 அவுன்ஸ். ஐக்கிய மாகாணத்திலே அதைவிட அதிகம். வங்காளத்துக்கும் சென்னைக்கும் மட்டும் 8-அவுன்ஸ்.

பம்பாய் மாகாணத்தில் ஆளுக்கு 15-கஜம் துணி, சென்னையில் 5-கஜம் துணி.

பம்பாயில் நூற்றுக்கணக்கான ஆலைகள், பாக்டரிகள், தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள்.

சென்னையில் 40, அல்லது 50க்குள்ளான மில்கள்.

ஆக ஒவ்வொன்றிலும் மாகாண மித்திரபேதத்தை காந்தியாரின் சீடர்களான பட்டேல் ஆட்சியினர் கையாண்டு வருகின்றனரே! இதற்கு என்ன "வெறி" என்று கூறுவது. இதை "பாசிச வெறி" என்று கூறலாமா? அல்லது அன்று கடைபெற்ற அல்லது காந்தியார் கூறிவந்த ராமராஜ்யமா மனுநீதி ஆட்சியா?

திராவிடர் கழகத்தாரோ அல்லது சென்னை மாகாணத்தவரோ மட்டும், மாகாண உணர்ச்சி கொண்டு இவ்வாறு கூறுவதாகக் கருதவேண்டாம்.

இம்மாதம் 23ந் தேதி மேற்கு வங்காளத்தில் மந்திரி தோழர் பந்தாரி தலைமையில் நடைபெற்ற உணவு மாநாட்டில் கல்கத்தா சிவில் சப்ளை கமிஷனர் தோழர் கே. வி. பாஸுக் தட்டிக்கேட்டுள்ளார்.

"வங்க மக்களுக்கு 8 அவுன்சும், பம்பாய் வாசிகளுக்கு 12 அவுன்சும் கொடுக்கப்படுவது அநீதியாகும்" என்று.

காந்தியாரே இதற்கும் ஏதாவது தத்துவார்த்தம் கூறி மழுப்பிவிடலாம். ஆனால் அவரது சீடகோடிகளான பிர்லா, பட்டேல் ஆட்சியினர் நடத்தும் பாசிஸ ஆட்சியின் போக்கே, மாகாண உணர்ச்சியை ஒவ்வொரு மாகாணத்தவருக்கும் உண்டாக்கியே தீரும் என்பது உறுதி

காந்தியார் கனவு கண்டு வந்த "ராம ராஜ்ய தர்பாரில் "மனு நீதி" தானே வழக்கப்படும்.

எனவே இன்று நடப்பது மக்கள் ஆட்சி அல்ல, பழைய "மாந்தாதா" ஆட்சி, ராமராஜ்ய தர்பார், இன்னும் எதிர்காலத்தில் இவ்வித மித்ரபேதங்களும் ஆளுக்கொரு, ஜாதிக்கொரு நீதியுந்தான் வழங்கப்படும்.

இவ்வநீதிகள் ஒழிக்கப்படவேண்டுமானால் ஒவ்வொரு மாகாணத்தவருக்கும் மாகாண உணர்ச்சி மட்டுமல்ல இன உணர்ச்சி ஏற்பட்டு இன்றைய பாசிஸ ஆட்சி முறையை ஒழித்தாலன்றி நம் நாடோ, அன்றி மக்களோ, குறிப்பாக ஏழைத்தொழிலாளர் மக்களோ விடுதலை நல்வாழ்வு பெற முடியாது என்பதை உயிர்நாடியாகிய உணவு விஷயத்தில் இந்துஸ்தான் சர்க்கார் என்பவர் நிரூபித்து விட்டனர்.

இதற்குப் பெயர் தான் சுதந்திரமாம், இதை நம்பித்தான் ஆகஸ்டு விழா கொண்டாடினர் நமது தோழர்கள். ஆனால் உடலையாகக் காண்பது பிர்லா ராஜ்யம்தான்.

எனவே இவ்வித அநீதிகள் ஒழியவேண்டுமானால் ஒவ்வொருவரும் கட்சி பேதத்தை விட்டு மாகாண உணர்ச்சி கொள்ள வேண்டுவது இன்றியமையாததாகி விட்டது.

---

அடிமையாய்த்தான் இருக்க வேண்டும் என்கின்றாயாக்கும்?

இராஜன்:—நான் அப்படிச் சொல்லவில்லை; இயற்கை அது. கொடுப்பவன் கை மேலாகவும், வாங்குபவன் கை கீழாகவும்தான் இருக்கும். கல்யாணம் இல்லாமல் இருந்தால் என்ன முழுகிப்போய் விடும். மலையாளத்தில் சில இராணிகளும் ஜமீன்தாரணிகளும் சம்பளம் கொடுத்து புருஷன்மார்களை வைத்துக்கொண்டு இருக்கிறார்களே, அவர்கள் கவுரவம் குறைந்துபோய்விட்டதா? அல்லது சமுதாயத்தில் குறைகூறுகிறார்களா? அவ்வளவுதூரம் போக உன்னால் முடியாவிட்டால் பெண்களை நன்றாய்ப் படிக்கவைத்து அல்லது ஏதாவது ஒரு தொழிலில் அமர்த்தி, 25வருடம்வரை கல்யாணப்பேச்சுபேசாமல் 25 முதல் 30 வயதிற்குள் அந்தப் பெண்ணையே தனக்குப் பிடித்தவனை ரிஜிஸ்டர் கல்யாணம் செய்துகொள்ளும்படிச் செய். வாழ்க்கைக்கு (அன்ன வஸ்திரத்துக்கு) புருஷன் கையை எதிர்பார்க்காமல்செய். அப்போது பெண் விடுதலை வேண்டி இருக்குமா அல்லது ஆண் விடுதலை வேண்டியிருக்குமா அல்லது இருவரும் தங்களை ஒருவருக்கொருவர் கட்டுப்படுத்திக் கொள்வார்களா என்று பார்!

---

(3ம் பக்கத்தொடர்ச்சி)

பார்ப்பனிய பார்ப்பனியமாக்கப்பட்டதொரு தேர்சபைக்குழுவை ஏற்படுத்தி அதற்கு சர்வாதிகாரமும் வழங்கிவிட்டு பலதிறப்பட்ட கருத்துகளுடைய காங்கரஸ்வாதிகள் தாம் நேரிடையாக சட்டசபை அங்கத்தினர்களை அணுகி தமது கருத்துகளுக்கு ஆதரவு தேடி பெருவாரியான ஓட்டுப் பெறுவதன் மூலம் அரசியல் நிர்ணய சபையில் இடம்பெறுவதை தடுத்துவிட்டதால் மக்களின் சுபிக்ஷ சக்தி நிர்மூலமாக்கப்பட்டு விட்டது. மேலும் காங்கரசின் பாசிசப் போக்கை வெளியாக உணர்ந்துகொள்ளும் அளவுக்கு ஏற்கனவே அரசியல் நிர்ணயசபை ஒரு நவயுக பிராமணசபையாகத்தான் காட்சியளிக்கிறது. எல்லா சமயங்களிலும் காந்தியின் ஆலோசனைப்படியே நடந்துகொள்வதாக உறுதி கொடுக்கும் போது இன்று வரைக்கும் காங்கரஸ் பக்தராகவும் காந்தி பக்தராகவும் இருந்து வரும் ஒருவருக்கு 400 ஸ்தானங்களில் ஒரு ஸ்தானம் அளிப்பதால் எந்தவித கேடும் வந்துவிடாது" என்றும் கூறி காந்தியாரும் காரியக்கமிட்டியாரும் மறுபடியும் ஆலோசனை செய்து நியாயமான பதில் கொடாத பட்சத்தில் தாம் இரண்டாம்முறையாக உண்ணாவிரதம் இருக்க வேண்டி ஏற்படுமென்றும் தெரிவித்திருக்கிறார்.

Edited, Printed and Published by N. Karivaradasamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.